**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 25.11.2025**
**OS. No. 180/2021**
**வழக்கு சாட்சி PW.1–சின்னபொண்ணு , க/பெ.ரத்தினம்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

<u>2ம் **பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

1) தாவா சொத்தில் பாகம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து என் கணவரும், என்னுடைய மச்சாண்டார் செம்பன் ஆகியோர் சேர்ந்து சுயமாக சம்பாதித்த சொத்து ஆகும், அதில் தான் பங்கு கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கில் மூதாதையர் சொத்து என்று சொல்லியுள்ளேன் என்றும், அவ்வாறு இருக்கையில் எனக்கு 2/12 பங்கு கிடைக்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. வாதிகளாகிய எங்களுக்கு 1/18 பங்கு தான் கிடைக்க உரிமை உள்ளது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி செம்பனுக்கு இரண்டு மகன்கள், மற்றும் இரண்டு மகள்கள் உள்ளனர். மூதாதையர் சொத்து என்றால் அவர்களையும் தரப்பினர்களாக சேர்த்து வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்றும், ஏனெனில் அவர்களுக்கும் சொத்தில் பாகம் உள்ளது என்றால் சரியல்ல.

2) நான் வழக்குடன் தாக்கல் செய்துள்ள அரசு வழிகாட்டுதல் மதிப்பின் அடிப்படையில் 1 ஏக்கர் ரூ.5 லட்சம் வருகிறது என்றும், நாங்கள் 2/12 பங்கு கேட்கும் பொழுது ரூ.1,66,666/– மதிப்பு வருகிறது என்றும், அதனால் இந்நீதிமன்றத்திற்கு இந்த வழக்கை விசாரிக்க அதிகார வரம்பு இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மதிப்பு இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்பதற்காக குறைத்து மதிப்பீடு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இரண்டு வாதிகளாகிய எங்களின் மதிப்பை தனிதனியாக காண்பித்து வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றும், ஒன்றாக சேர்த்து தாக்கல் செய்துள்ளதால், இந்நீதிமன்றத்திற்கு இந்த வழக்கை விசாரிக்க அதிகார வரம்பு இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சக்குபந்திகள் விவரம் தெரியுமா என்றால்

தெரியாது. தாவா சொத்தில் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் 3 வீடுகள் உள்ளது. அதில் நாங்கள் ஒரு சீட் வீடு கட்டியுள்ளோம். அதன் மதிப்பு எவ்வளவு இருக்கும் என்றால் எனக்கு தெரியவில்லை. அதிலுள்ள மெத்தை வீடுகள் சுமார் ரூ.20 லட்சம் மதிப்பு இருக்குமா என்றால் இருக்கும். தாவாசொத்திலுள்ள வீடுகளை குறிப்பிடவில்லை என்றும், அதற்குண்டான மதிப்பும் காட்டவில்லை என்றால் சரியல்ல.

3) தாவா சொத்து எந்த தேதியில் வாங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை. அந்த நிலம் வாங்கும் போது என் கணருக்கு என்ன வயது என்றால் 10 வயது இருக்கும். என் கணவருக்கு 2ம் பிரதிவாதி கார்டியனாக இருந்து தான் கிரையம் பெற்றனர் என்றால் சரிதான். என் கணவர் இறக்கும் போது என்ன வயது இருக்கும் என்றால் 30 வயது இருக்கும். என் கணவர் மேஜர் ஆன பிறகு, 2ம் பிரதிவாதியும், என் கணவரும் அந்த சொத்தில் பாகம் பிரித்து வீடு கட்டிக்கொண்டார்கள் என்றும், நான் பாகம் பிரிக்கவில்லை என்று வழக்கில் தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. முனியன் நிலத்திற்கு தெற்கு, கருப்பண்ணன் நிலத்திற்கு வடக்கு, வெங்கடேஷன் நிலத்திற்கு மேற்கு, எங்களுடைய நிலத்திற்கு கிழக்கு இதன் மத்தியிலுள்ள நிலத்தை தான் 2ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் எனக்கு தெரியவில்லை.

4) நாங்கள் தாவா சொத்தில் தான் குடியுள்ளோம், விவசாயமும் செய்து வருகிறோம். இரண்டு தாக்காக தாவா சொத்துக்கள் பிரிக்கப்பட்டு, அதில் 2ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட குருநாதன் நிலத்திற்கு கிழக்கு, பச்சியம்மாள் நிலத்திற்கு வடக்கு, செட்டியப்பன் நிலத்திற்கும் தெற்கு, வாதிகளின் நிலத்திற்கு மேற்கு இதை தான் 2ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் எனக்கு தெரியவில்லை. என் கணவர் ரத்தினத்திற்கு முருகேசன் நிலத்திற்கும் தெற்கு, பச்சியம்மாள் நிலத்திற்கு வடக்கு, செம்பன் நிலத்திற்கு கிழக்கு, மேற்கு இதன் மத்தியில் தான் பிரித்து கொடுக்கப்பட்டது என்றால் பிரித்து கொடுக்கப்படவில்லை, இரண்டாக பிரித்து நாங்கள் அனுபவத்தில் உள்ளோம். ஏற்கனவே தாவா சொத்தை பாகம் பிரித்து தனிதனியாக அனுபவம் செய்து வருவதாக 2ம் பிரதிவாதி பதில் தாக்கல் செய்து இந்த வழக்கை நடத்தி வருகிறார் என்றால் எனக்கு தெரியவில்லை.

5) நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 பட்டா எண்.1868 ல் ஆண்டியப்பன் மகன் ரத்தினம், செம்பன், முனியன் மகன்கள் சிமிட்டு கண்ணன், தாண்டவன், கருவாயன், பூனையன், குருடுபையன் ஆகியோர் பெயரில் உள்ளது என்றால் எனக்கு எழுத, படிக்க தெரியாது. மற்ற நபர்களின் பெயர் ஏன் பட்டாவில் உள்ளது என்று வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு தெரியவில்லை. நாங்கள் வழக்கில் பட்டாவை தாக்கல் செய்யும்போதே மற்ற நபர்களை ஏன் பட்டாவில் சேர்க்கப்பட்டுள்ளது என சொல்லியிருக்கவேண்டும் என்றால் எனக்கு தெரியவில்லை. பட்டாவிலுள்ள மற்ற நபர்களையும் வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து அவர்களுக்கும், வழக்கில் அழைப்பாணை அனுப்பியிருக்கவேண்டும் என்றால் சரியல்ல. அவசியமான தரப்பினர்களை சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. ஏற்கனவே சக்குபந்தி பார்த்து பாகம் பிரிக்கப்பட்டசொத்திற்கு தவறான சங்கதிகள் சொல்லி தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/—திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.